6

# "நாம் ஜெயம்கொண்டோம்! தேவனுக்கு நன்றி!"

*புதிய ஏற்பாட்டின் ஒவ்வொரு புத்தகமும் தனக்குச் சொந்தமான விசேஷித்த கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளது. நடபடிகளின் புத்தகம் செயல்துடிப்புள்ள கிறிஸ்தவத்தின் சித்திரத்தை வரைகிறது. பிலிப்பியருக்கு எழுதப்பட்ட நிருபம் சந்தோஷம் நிறைந்த கிறிஸ்தவத்தைப் பற்றிக் கூறுகிறது. யாக்கோபு நிருபம் நடைமுறைக் கிறிஸ்தவம் பற்றிய கருத்துக்களால் பொதியப்பட்டுள்ளது. வெற்றிகரமான கிறிஸ்தவம் என்பது வெளிப்படுத்தின விசேஷத்தின் ஆய்வுக்கருத்தாக உள்ளது!*

*"வெற்றி" (ஜெயம்) என்பதற்கான Nikao என்ற கிரேக்க வார்த்தையின் வினைவடிவம் வெளிப்படுத்தின விசேஷத்தின் இருபத்தி இரண்டு அதிகாரங்களில் பதினேழு முறைகள் காணப்படுகிறது. Nikao என்பது பொதுவாக, "மேற்கொள்ளுதல்," "ஜெயங்கொள்ளுதல்," அல்லது "ஜெயங் கொண்டவர்களாய் இருத்தல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அதிகாரம் 5ல் இயேசு, "ஜெயங்கொண்டிருக்கிறார்" என்று விவரிக்கப் பட்டுள்ளார் (வசனம் 5).* The Contemporary English Version *என்ற வேதாகமம்,* He "has won the victory" *என்று கூறுகிறது. 6:2ல் நாம்,* **"அவன் ஜெயிக்கிறவனாகவும் ஜெயிப்பவனாகவும் புறப்பட்டான்"** *என்று வாசிக்கின்றோம்; அதாவது, "அவர் ஏற்கனவே சில வெற்றிகளை வென்றிருந்தார், இன்னும் அதிகமான வெற்றிகளை வெல்லும்படிக்குப் புறப்பட்டார்"* (CEV). *அதிகாரம் 12ல், கிறிஸ்தவர்கள் "ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை (சாத்தானை) ஜெயித்தார்கள்" என்று நமக்குக் கூறப்படுகிறது (வசனம் 11).* CEV *வேதாகமத்தில்* "our people defeated Satan" *என்றுள்ளது. அதிகாரம் 15ல் யோவான், சபையானது தேவனுடைய பிரசன்னத்தில் ஜெயங்கொண்டதாக நிற்பதாகச் சித்தரித்தார்: "மிருகத்திற்கு … உள்ளாகாமல் ஜெயங்கொண்டவர்கள் …" (வசனம் 2). "நாங்கள் வெற்றி பெற்றோம்! தேவனுக்கு நன்றி, நாங்கள் வெற்றிபெற்றோம்!" என்பதே வெளிப்படுத்தின விசேஷத்தின் செய்தியாக உள்ளது என்று யாரோ ஒருவர் கூறினார்.*

*பின்னணி பற்றிய நமது கடைசிப் பாடமாகிய இதில், வெற்றியின் செய்தியைப் பற்றியும் அது வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் எவ்வாறு மேம்படுத்தப்படுகிறது என்பதைப் பற்றியும் கலந்துரையாடு வதற்கு நாம் விரும்புகின்றோம்.*

# செய்தி கலந்துரையாடப்பட்டது

**மூன்று பாகமான செய்தி**

வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் வெற்றிச் செய்தி மூன்று பாகங்களைக் கொண்டுள்ளது:

(1) நன்மை மற்றும் தீமை ஆகியவற்றிற்கு இடையிலான போராட்டம் (பக்கம் 104 காணவும்),

(2) நன்மையின் தோற்றப்படியான தோல்வி[1] (பக்கம் 105 காணவும்) மற்றும்,

(3) நன்மையின் நிறைவான வெற்றி (பக்கம் 106 காணவும்).

மூன்று மடங்கான இந்தச் செய்தியின் விவரிப்பு என்ற வகையில், அதிகாரம் 11ல் இரண்டு சாட்சிகள் பற்றிய வரலாற்றைக் கண்ணோக்குங்கள். முதலாவது நாம், தேவனுடைய செய்தியை இரண்டு சாட்சிகளும் அறிவிக்கையில் நன்மைக்கும் தீமைக்கும் இடையிலான போராட்டத்தைக் காணுகின்றோம் (வசனங்கள் 3-6).

பாதாளக் குழியில் இருந்த எழும்பிய மிருகம் இரண்டு சாட்சிகளுடன் யுத்தம் செய்தபோது, நன்மை தோல்வியடைந்ததாகக் காணப்பட்டது.

> ... பாதாளத்திலிருந்தேறுகிற மிருகம் அவர்களோடே யுத்தம்பண்ணி, அவர்களை ஜெயித்து, அவர்களைக் கொன்றுபோடும். அவர்களுடைய உடல்கள் ... வீதியிலே கிடக்கும். ஜனங்களிலும், கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும், ஜாதிகளிலுமுள்ளவர்கள் அவர்களுடைய உடல்களை மூன்றரை நாள் வரைக்கும் பார்ப்பார்கள், அவர்களுடைய உடல்களைக் கல்லறைகளில் வைக்கவொட்டார்கள். ... அவர்கள் நிமித்தம் பூமியில் குடியிருக்கிறவர்கள் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து, ஒருவருக்கொருவர் வெகுமதிகளை அனுப்புவார்கள் (வசனங்கள் 7-10).

கடைசியில் நாம், நன்மையின் நிறைவான வெற்றியைக் காணுகின்றோம்:

> மூன்றரை நாளைக்குப்பின்பு தேவனிடத்திலிருந்து ஜீவஆவி அவர்களுக்குள் பிரவேசித்தது, அப்பொழுது அவர்கள் காலூன்றி நின்றார்கள், அவர்களைப் பார்த்தவர்களுக்கு மிகுந்த பயமுண்டாயிற்று. இங்கே ஏறிவாருங்கள் என்று வானத்திலிருந்து தங்களுக்கு உண்டான பெரிய சத்தத்தை அவர்கள் கேட்டு, மேகத்தில் ஏறி வானத்திற்குப் போனார்கள், அவர்களுடைய சத்துருக்கள் அவர்களைப் பார்த்தார்கள். அந்நேரத்திலே பூமி மிகவும் அதிர்ந்தது, உடனே அந்த நகரத்தில் பத்திலொருபங்கு இடிந்து விழுந்தது, மனுஷரில் ஏழாயிரம்பேர் பூமியதிர்ச்சியினால் அழிந்தார்கள், மீதியானவர்கள் பயமடைந்து பரலோகத்தின் தேவனை மகிமைப்படுத்தினார்கள் (வசனங்கள் 11-13).

முதல் நூற்றாண்டில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு, இந்த மூன்றுபாக

செய்தியின் முக்கியத்துவமானது அதிகமாக வலியுறுத்தப்பட அவசியமற்றதாக உள்ளது. ரோமாபுரியின் மூழ்கடிக்கச் செய்யும் பலமானது அவர்களுக்கு எதிராக அணிவகுத்து நின்றது. கிறிஸ்தவர்கள் "நாள் முழுவதும் கொலைசெய்யப்பட்டுக் கொண்டிருந்தனர்"; அவர்கள், "அடிக்கப்படும் ஆடுகளைப்போல எண்ணப்பட்டார்கள்" (ரோமர் 8:35). அவமானத்திற்கு உள்ளாக்கப்படும் தோல்வி உடனடியாக வருவதாய் இருந்தது; கிறிஸ்தவம் தேய்ந்து மறைதல் என்பது தவிர்க்க இயலாததாகக் காணப்பட்டது. சூழ்நிலை எப்படிப்பட்டதாகத் தோன்றினாலும், தேவன் இன்னமும் கட்டுப்பாடு செலுத்துகின்றார் என்ற செய்தியைக் கேட்பது கிறிஸ்தவர்களுக்கு அவசியமானதாக இருந்தது. அவர்கள் விசுவாசம் நிறைந்தவர்களாய் நிலைத்திருந்தால், இறுதியில் அவர்கள் வெற்றிகொள்ளும் பக்கத்தில் இருப்பார்கள்!

அந்தச் செய்தி இன்றைய நாட்களிலும் இன்னமும் அவசியமானதாக உள்ளது. சற்றுக் காலத்திற்கு முன், கிழக்கு ஐரோப்பாவின் ஒரு குறிப்பிட்ட நாட்டில், மத சுதந்திரம் மீண்டும் தடைசெய்யப்பட்டது. அங்கிருந்த கிறிஸ்தவர்கள் நிகழ்ச்சிகளின் இந்த மாற்றத்துடன் போராடினார்கள். அவர்கள், "இதைப் பற்றி நாங்கள் தேவனிடத்தில் ஊக்கமாய் ஜெபித்தோம். இது எப்படி நடந்திருக்க முடிந்தது?" என்று அவர்கள் மறுப்பு எழுப்பிக் கொண்டிருந்தனர். இந்த வாழ்க்கையில் சிலவேளைகளில் துன்மார்க்க சக்திகள் வெற்றியடைவதாகக் காணப்படுகிறது - ஆனால் முடிவில், நன்மையின் சக்திகள் வெற்றிபெற்றதாகத் திகழும் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது.

மதசுதந்தரத்தை மகிழ்வுடன் அனுபவிக்கும் நாடுகளிலும்கூட வெளிப்படுத்தின விசேஷத்தின் செய்தி அவசியமாக உள்ளது. ஒழுக்கரீதியான தராதரங்கள் தாழுகையில், வன்முறைகள் பெருகுகையில், மற்றும் நமது சமூகத்தின் அஸ்திபாரங்கள் சீரழிவதை நாம் காணுகையில், நாம் கவலையில் மூழ்கிப்போய்விடலாம். உற்சாகக் குறைவுக்கு எதிராக நம்மை நாம் காத்துக்கொள்ளாவிட்டால், விட்டுக் கொடுத்து, தோல்வியடைவதாக நாம் உணரக்கூடும். துன்மார்க்கத்தினால் பெறப்படும் எந்த வெற்றியும் தற்காலிகமானதாகவும் சற்றுக்காலமே வாழக்கூடியதாகவும் உள்ளது என்பதை உணர்ந்தறிதல் என்பது எவ்வளவு முக்கியமானதாக உள்ளது! கடைசியில் நன்மையே வெற்றிபெறும்!

நான் அறிந்துள்ள ஒரு மனிதர், மர்மக் கதைப் புத்தகங்களை வாசிப்பதில் வழக்கத்திற்கு மாறான ஒரு அணுகுமுறையைக் கொண்டுள்ளார்: முதலில் அவர், மர்மம் எப்படி தீர்க்கப்பட்டது என்பதைக் கண்டறிவதற்காகப் புத்தகத்தின் முடிவுப்பகுதியை வாசிப்பார். நம்மில் பெரும்பான்மையானவர்கள், ஒரு புத்தகம் எவ்வாறு முடிகிறது என்பதைப் பற்றி (முன்னதாகவே) அறிவதற்கு விரும்புவதில்லை. அந்தப் புத்தகத்தை ஏற்கனவே வாசித்திருப்பவர்களிடம் நாம், "அது எப்படி முடிகிறது என்று தயவு செய்து எனக்குக் கூறாதீர்கள்'' என்று வேண்டிக் கேட்டுக் கொள்கின்றோம். இதற்கு நேர்மாறாக, நன்மை மற்றும் தீமை ஆகியவற்றிற்கு இடையில் நடக்கும் போராட்டத்தைப் பற்றி, ''அது எவ்வாறு

*முடிகிறது" என்பதை நாம் அறிய விரும்புகின்றோம் - இவ்விதமாகவே தேவன் கடைசிப் புத்தகத்தை வேதவசனங்களில் வைத்தார். நான் அறிந்துள்ள இன்னொரு மனிதர், "நான் வேதாகமத்தின் பின்பகுதியை கண்ணோக்கியுள்ளேன், அதில் என்ன உள்ளதென்று யூகியுங்களேன்? நாம் வெற்றிகொள்கின்றோம்!" என்று வெற்றிச் சிரிப்புடன் கூறுகின்றார்.*

***மீண்டும் மீண்டும் கூறப்படும் செய்தி***

*வெளிப்படுத்தின விசேஷத்தின் வெற்றிச் செய்தியை நாம் தவறவிடாதிருப்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக, அதைப் பரிசுத்த ஆவியானவர் மீண்டும் மீண்டும் - குறைந்தது ஏழு முறைகள் - திரும்பக் கூறினார்.*


*கடந்த காலங்களில் பலர், வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் காட்சிகளை நாள்வரிசை அமைவு முறையில் விளக்கப்படுத்துவதற்கு முயற்சி செய்துள்ளனர். நாள்வரிசை முறைமையைப் பின்பற்றாத இந்தப் புத்தகத்தின் பகுதிகளுடன் பேராடும்படி இந்த மனிதர்கள் நிர்ப்பந்திக்கப் பட்டனர். எடுத்துக்காட்டாக, அதிகாரம் 12ல் ஒரு ஸ்திரீ "சூரியனை அணிந்திருந்தாள்" (வசனம் 1), "சகல ஜாதிகளையும் இரும்புக்கோலால் ஆளுகைசெய்யும் ஆண்பிள்ளையை அவள் பெற்றாள்" (வசனம் 5). சகல இனங்களையும் "இருப்புக்கோலால் ஆளுகை செய்தல்" என்ற குறிப்பானது, புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களால் இயேசுவுக்கு அடிக்கடி நடைமுறைப் படுத்தப்படுகிற மேசியாத்துவ சங்கீதமான சங்கீதம் 2ல் இருந்து வருகிறது (நடபடிகள் 13:33; எபிரேயர் 1:5; 5:5). 12:5ல் உள்ள வசனப்பகுதியானது இயேசுவின் பிறப்பிற்கான மறைமுகமான குறிப்பு என்பது தெளிவாக உள்ளது; ஆனால் வெளிப்படுத்தின விசேஷம் நாள்வரிசை முறைமையின்படி எழுதப்பட்டிருந்தால், அதன் பாதிக்கும் மேற்பட்ட பகுதியில் நாம் இயேசுவின் பிறப்பைக் குறித்து வாசிக்க வேண்டியதாக இருப்பது ஏன்?*

*மேலும், இந்தப் புத்தகமானது அடிக்கடி, காலங்களினுடே முன்னும் பின்னும் தாண்டிச் செல்வதாகக் காணப்படுகிறது. பாபிலோன் என்ற துன்மார்க்கமான நகரத்தை இந்தப் புத்தகம் கையாளும் விதம் இதற்கு ஒரு உதாரணமாக உள்ளது. அதிகாரம் 14ல் பாபிலோனின் வீழ்ச்சியானது ஏற்கனவே நடந்து முடிந்திருந்தது போல் அறிவிக்கப்படுகிறது, ஆனால் அதிகாரம் 18 வரை பாபிலோன் உண்மையில் அறிமுகப்படுத்தப்படவே இல்லை. இந்தப் புத்தகம் வரலாற்றின் முடிவை திரும்பத் திரும்பச் சித்தரிக்கிறது என்பது உறுதி. R. C. H. லென்ஸ்கி அவர்கள், "மாறுபட்ட ஏழு இடங்களில் வெளிப்படுத்தின விசேஷமானது உலகத்தின் முடிவு பற்றிய கருத்தை அடைகிறது: 6:12-17; 7:9-17; 11:18; 14:4-20; 16:17-21; 19:11-21; 20:7-15" என்று கவனித்தார்.[2]*

*வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் முன்னும் பின்னுமான, இங்கும் அங்குமான அணுகுமுறையை நாம் எவ்வாறு விளக்கப்படுத்த இயலும்? "இந்தப் புத்தகமானது ஒரே காலகட்டத்தை மற்றும் ஒரே நிகழ்ச்சியை(களை)த் தனது வேறுபட்ட பகுதிகளில் மாறுபட்ட அம்சங்*

*களின்கீழ் கண்ணோக்குகிறது" என்பது மிகச்சிறந்த விளக்கமாகக் காணப் படுகிறது.[3] வெளிப்படுத்தின விசேஷம் ஏழு பகுதிகளைக் கொண்டுள்ளது, அதாவது "இணையாக ஓடுகிற பகுதிகள்" மற்றும் "இவை ஒவ்வொன்றும் (கிறிஸ்தவ)யுகம் முழுவதையும் முதலில் இருந்து கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரையிலும் விரிந்து பரவுகின்றன" என்று வில்லியம் ஹென்ரிக் ஸென் அவர்கள் கருத்துத் தெரிவித்தார்.[4]*

*வெளிப்படுத்தின விசேஷம் புத்தகமானது பள்ளத்தாக்குகள் மற்றும் மலைகள் ஆகியவற்றின் வரிசையாக நினைக்கப்படலாம், இந்தப் பயணத் தின் முடிவில் மிக உயர்ந்த (மற்றும் மிகக் கெம்பீரமான) மலை உள்ளது. நாம் இந்தப் புத்தகத்தினூடே பயணிக்கையில், பரீட்சைகள் மற்றும் எதிர்ப்பு ஆகியவற்றுடன் போராடிக்கொண்டு, பள்ளத்தாக்குகளில் அதிகமான நேரத்திற்கு இருப்போம். இருப்பினும், அவ்வப்போது நாம், ஒரு மலை உச்சியில் நிற்பதற்கு அனுமதிக்கப்படுவோம், அங்கு நாம், மகிமை நம்முடையதாக இருக்கும் என்பது பற்றிய காட்சியைப் பற்றிக்கொள்ள முடியும். இவ்விதமாக நாம் தொடர்ந்து முன்னேறும்படி ஊக்குவிக்கப் படுகின்றோம்.*



*ஒவ்வொரு பகுதியிலும் நாம் ஒரேவித அடிப்படைச் செய்தியைக் கொண்டுள்ளோம்: (1) நன்மை மற்றும் தீமைக்கு இடையில் போராட்டம், (2) நன்மை தோல்வியடைவதாகக் காணப்படுதல், மற்றும் (3) நன்மையின் நிறைவான வெற்றி.*

## ஒருங்கிணைக்கப்பட்ட செய்தி

*வெளிப்படுத்தின விசேஷம் புத்தகமானது பலபகுதிகளாகத் தொகுக்கப் பட்டிருந்தாலும், இவைகள் தனிப்படுத்தப்பட்ட அலகுகளாக நினைக்கப் படக் கூடாது. முதல் பார்வையில் வெளிப்படுத்தின விசேஷம், தொடர்பற்ற காட்சிகளின் ஒரு குழப்பமான வரிசையாக இருப்பது போல் தோன்றுகிறது; ஆனால் படிப்பை நீங்கள் தொடருகையில், இந்தப் புத்தகத்தில் உள்ள செய்திக்கு வியக்கத்தக்க ஒருமைப்பாட்டையும் இசைவையும் நீங்கள் கண்டறிவீர்கள்.*

*இந்தப் புத்தகம் வளருகையில் மேம்படுத்தப்பட்ட ஆய்வுக்கருத்துக்களி னால் இந்த ஒருமைப்பாடு சாதிக்கப்படுகிறது என்பது ஒரு வழிமுறையாக இருக்கிறது. எடுத்துக்காட்டாக, பலிபீடத்தின்கீழ் இருந்த (வேதசாட்சி களாக மரித்த) பரிசுத்தவான்கள் பற்றிய ஆய்வுக்கருத்தை ஆழ்ந்து சிந்தியுங்கள். இந்தப் பரிசுத்தவான்கள் 6:9-11ல் அறிமுகப்படுத்தப் படுகின்றனர், அவ்விடத்தில் அவர்கள் பழிவாங்குதலுக்காகக் கதறினர்: ''எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச்செய்யாமலும் பழிவாங்காமலும்*

*இருப்பீர்?” (வசனம் 10). 8:3-5ல், ஒரு தூதன், பரிசுத்தவான்களின் ஜெபங்களுடன் தூபவர்க்கத்தைக் கூட்டி, பின்பு பலிபீடத்தில் இருந்த நெருப்பைப் பூமியின்மீது வீசினார்; பழிவாங்குதல் தொடங்கிற்று. 14:7-20ல், பலிபீடத்தில் இருந்து ஒரு தூதன் வந்து (பழிவாங்குதலின்) அரிவாளைப் பூமியின்மீது செலுத்த வேண்டும் என்று கட்டளையிட்டார்; பின்பு இரத்தம் ஓடத்தொடங்கிற்று. கடைசியில், 16:5-7ல், பலிபீடத்தில் இருந்து வந்த ஒரு குரலானது பரிசுத்தவான்களைக் கொன்றவர்களுக்குத் தரப்பட்ட தண்டனையை ஆமோதிக்கின்றார்: “அவர்கள் ... அதற்குப் பாத்திரராயிருக்கிறார்கள்!” (வசனம் 6ஐக் காணவும்.)*

*இந்தப் புத்தகத்திலும் இதற்கு அடுத்து வரும் புத்தகத்தின் முதற்பகுதியிலும் நாம் காணப்போகின்றபடி, வெளிப்படுத்தின விசேஷத்தின் பல ஆய்வுக்கருத்துக்கள், அதிகாரம் 2, 3ல் உள்ள ஏழுசபைகளுக்கு எழுதப்பட்ட கடிதங்களில் அறிமுகப்படுத்தப் படுகின்றன.*

## செய்தி மேம்படுத்தப்பட்டது

*வெளிப்படுத்தின விசேஷத்தில் உள்ள வெற்றியின் மும்மடங்குச் செய்தியைச் சிந்தையில் கொண்டவர்களாய் நாம் இந்தப் புத்தகத்திற்கு வரைக்குறிப்பிட்டு, இதை ஒரு விரைவுப்பயணமாகக் காண்போம்.*

**ஒரு எளிய வரைக்குறிப்பு**

*இந்தப் புத்தகமானது ஒவ்வொன்றிலும் பதினோரு அதிகாரம் கொண்ட, ஏறக்குறைய சமமான இரு பகுதிகளாகத் தன்னிலேயே பிரிந்து நிற்கிறது என்பதை விளக்கவுரையாளர்கள் பலர் ஒப்புக்கொள்கின்றனர்.[5] அதிகாரம் 12 இயேசுவின் பிறப்பு பற்றிய விபரத்துடன் வரலாற்றைத் திரும்பவும் தொடங்குவதாகக் காணப்படுவதால், (ஏற்கனவே குறிப்பிடப்பட்டபடி) இந்த அதிகாரம், இப்புத்தகத்தை இரண்டாகப் பிரிக்கும் இடமாகத் தெளிவாகக் காணப்படுகிறது.*

*இதற்கு மறுபுறத்தில், இந்த இரண்டு பிரதான பிரிவுகளையும் மேலும் துணைப்பிரிவுகளாகப் பிரிப்பது எப்படி என்பதில் கருத்து ஒருமைப்பாட்டை நாம் காண்பதில்லை. பாடக்கருத்துக்களின் பல்வேறு பகுதிகள் விபரத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டியவைகளாய் இருக்கின்றன: ஏழு சபைகளுக்குக் கடிதங்கள் (2; 3), ஏழு முத்திரைகள் கொண்ட புத்தகம் (4-7), ஏழு எக்காளங்கள் (8-11), மற்றும் தேவகோபத்தின் ஏழு கலசங்கள் (15; 16). இந்தப் பகுதிகள் ஒரு வரைக்குறிப்பாக ஒருமைப்படுத்துவதற்கான ஒரு வழிமுறை பின்வருமாறு:*

I. *ஏழு சபைகளின் மத்தியில் கிறிஸ்து (1-3).*
II. *ஏழு முத்திரைகள் கொண்ட புத்தகம் (4-7).*
III. *ஏழு எக்காள சத்தங்கள் (8-11).*
IV. *சபையின் விரோதிகள் பற்றிய அறிமுகம் (12-14).*
V. *தேவகோபத்தின் ஏழு கலசங்கள் (15; 16).*

VI. *சபையின் விரோதிகளில் பலர் அழிக்கப்படுதல் (17-19).*
VII. *வலுசர்ப்பம் அழிக்கப்படுதல், தொடர்ந்து புதிய வானமும் புதியபூமியும் ஏற்படுதல் (20-22).*

*பல காரணங்களுக்காக நான் இந்த வரைக்குறிப்பை விரும்புகின்றேன். முதலாவது, இது எளிமையானதாக உள்ளது. மேலும் இது ஏழு பிரிவுகளைக் கொண்டுள்ளது, ஏழு என்பது இந்தப் புத்தகத்தின் திறவுகோல் எண்ணாக உள்ளது. இந்தப் புத்தகத்தின் முதல் பாதியில் மூன்று பிரிவுகளும், இரண்டாம் பாதியில் நான்கு பிரிவுகளும் உள்ளன. ஏழு விஷயங்கள் மூன்று மற்றும் நான்கு கொண்டவையாகப் பிரிக்கப்பட்டிருத்தல் என்பது வெளிப் படுத்தின விசேஷத்திற்கு உரிய ஒரு பண்பாக உள்ளது. வாசகர்களுக்கு உற்சாகம் ஊட்டுவதற்காக ஒவ்வொரு பிரிவும் ஒரு "மலையுச்சிப் பார்வை யிடுதலை" கொண்டுள்ளது. நீங்கள் இந்த வரைக்குறிப்பை உங்கள் சிந்தையில் கொண்டிருக்க வேண்டும் என்று நான் கருத்துத் தெரிவிக் கின்றேன். அவ்வாறு நீங்கள் செய்தால், இந்தப் புத்தகத்தின் வெவ்வேறு பகுதிகளை நீங்கள் பிரதானக் கருத்துக்களின் கீழ் பொருத்த முடியும்.*

**சுருக்கமான மேல்கண்ணோட்டம்**

*இப்போது நான் உங்களை, வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் ஒரு துரிதப்பயணம் அழைத்துச்செல்ல அனுமதியுங்கள். மும்மடங்கு செய்தி யானது மீண்டும்மீண்டும் எவ்வாறு திரும்பக்கூறப்படுகிறது என்பதை விசேஷமாகக் கவனியுங்கள்:*

I. *ஏழு சபைகளின் மத்தியில் கிறிஸ்து (1-3). அதிகாரம் 1ல் நாம், கிறிஸ்து விளக்குத்தண்டுகளின் மத்தியில் நடத்தல் பற்றிய தரிசனத்தைக் கொண்டுள் ளோம், இது ஏழு சபைகள் என்று அடையாளப்படுத்தப்படுகிறது. அதிகாரம் 2 மற்றும் 3 ஆகியவை ஏழு சபைகளுக்குக் கடிதங்களாக உள்ளன. அந்தக் கடிதங்களை நாம் வாசிக்கையில், நன்மைக்கும் தீமைக்கும் இடையிலுள்ள தெளிவான போராட்டத்தை நாம் காணுகின்றோம் - மற்றும் தீமையே வெற்றிபெறுவதாகத் தோன்றுகிறது (2:10, 13). இருப்பினும் இயேசு, விசுவாசத்துடன் நிலைத்திருப்பவர்களுக்கு அற்புதமான வாக்குத்தத்தங் களைக் கொடுக்கின்றார் (2:7, 11, 17): அவர் துன்மார்க்கரைத் தண்டிக்கவும் (2:16) விசுவாசம் உள்ளவர்களுக்குப் பலன் அளிக்கவும் (3:12) திரும்ப வருவார் (3:3).*

II. *ஏழு முத்திரைகள் கொண்ட புத்தகம் (4-7). அதிகாரங்கள் 4 மற்றும் 5ல் உள்ள அரியணைக் காட்சியானது புத்தகத்தின் எஞ்சிய பகுதிக்குக் களத்தை அமைக்கிறது. ரோமாபுரியல்ல, தேவனே கட்டுப்பாடு செலுத்து கின்றவராய் இருக்கின்றார்! முத்திரைகள் உடைக்கப்பட்டபோது, முதல் நான்கு முத்திரைகள் (நான்கு குதிரை வீரர்கள்) நன்மைக்கும் தீமைக்கும் இடையில் போராட்டத்தை வெளிப்படுத்துகின்றன (6:1-8). ஐந்தாம் முத்திரை உடைக்கப்பட்டபோது, வேதசாட்சிகளாக மரித்தவர்கள், பழிவாங்குதலுக்கு அனுமதிக்கப்படாமல், பலிபீடத்தின் கீழ் இருப்பதைக் காணுகின்றோம் (6:9-11); தீமை வெற்றிபெற்றதுபோல் தோன்றுகிறது.*

*பின்பு ஒரு பெரிய பேரழிவு ஏற்படுகிறது (6:12-17) - ஆனால் தேவனுடைய ஊழியக்காரர்கள் முத்திரையினால் பாதுகாக்கப் படுகின்றனர் (7:1-8). கடைசியாக, அவர்கள் பரலோகத்தில் இருப்பதாகச் சித்தரிக்கப்படுகின் றனர் (7:9-17). நன்மை வெற்றியடைந்துள்ளது!*

III. *ஏழு எக்காள சத்தங்கள் (8-11). முதல் ஆறு எக்காளங்கள் பூமியைப் பாழாக்கும் இடர்ப்பாட்டை அறிவிக்கின்றன (8:2-9:21). பின்பு, பரிசுத்த வான்களைத் துன்புறுத்தும்படி உலகத்தைத் தூண்டியது எது என்று நமக்குக் கூறப்படுகிறது: அது, கசப்பும் இனிப்புமான செய்தியுடன் உள்ள வசனமாகும் (10:1-11). இரண்டு சாட்சிகளின் வரலாறு என்பது இப்பகுதி யின் இருதயம் போன்ற மையக்கருத்தாக உள்ளது (11:1-13), இதில் நாம், (ஏற்கனவே குறிப்பிடப்பட்டபடி) போராட்டம், தோல்வியடைதல் போன்ற தோற்றம், மற்றும் நிறைவான வெற்றி ஆகியவற்றைக் காணுகின்றோம். இந்தப் பகுதியானது வெற்றியைக் கொண்டதாக முடிகிறது (11:14-19).*

IV. *சபையின் விரோதிகள் பற்றிய அறிமுகம் (12-14). அதிகாரம் 12, சாத்தான் என்று அடையாளம் கண்டுகொள்ளப்பட்ட பெரிய வலுசர்ப் பத்தை அறிமுகப்படுத்துகிறது (வசனம் 9). சாத்தான் இயேசுவை அழிக்க இயலாமல் போனபோது, அவன் தேவனுடைய மக்களுடன் யுத்தம் செய்கின்றான் (இங்கு தீமையுடனான போராட்டம் உள்ளது; வசனம் 17). அதிகாரம் 13ல் சாத்தானுடைய இரண்டு உடன்வேலையாட்கள் நமக்கு அறிமுகப்படுத்தப் படுகின்றனர்: அவைகள், சமுத்திரத்தில் இருந்து எழும்பி வந்த மிருகமும் (வசனங்கள் 1-10) பூமியில் இருந்து எழும்பி வந்த மிருகமும் (வசனங்கள் 11-18) ஆகும்.[6] முதல் மிருகம் பரிசுத்தவான்களுடன் யுத்தம் செய்து அவர்களை ஜெயிக்கிறது (வசனம் 7). "வெற்றி கொண்டிருத்தல்" என்று அர்த்தப்படுகிற கிரேக்க வார்த்தை இவ்விடத்தில், "ஜெயிக்கும்படிக்கு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது; இவ்விடத்தில் நன்மை தோல்வி அடைந்ததாகத் தோன்றுகிறது. நாம் நம்பிக்கை இழந்தவர்கள் ஆகக்கூடுவதற்கு முன்பு, அதிகாரம் 14 நம்மை, நன்மையின் வெற்றி மற்றும் தீமைக்குத் தண்டனை ஆகியவற்றின் தரிசனங்களின் வரிசை என்ற மலை உச்சிக்கு எடுத்துச் செல்லுகிறது!*

V. *தேவகோபத்தின் ஏழு கலசங்கள் (15; 16). வெளிப்படுத்தின விசேஷம் நமது ஆவிக்குரிய விரோதிகளை நமக்கு அறிமுகப்படுத்தியுள்ள நிலையில், தேவகோபத்தின் ஏழு கலசங்கள் என்ற கருத்துடன் "ஏழு" என்ற மீண்டும் மீண்டும் வரும் பல்லவிக்குத் திரும்புகிறது. இந்தப் பகுதியானது செய்தியின் மூன்றாம் பாகத்திற்கு நேரடியாக நகருகிறது: நீதிமான்களின் வெற்றியும் (15:2-4) பொல்லாதவர்களுக்கு தண்டனையும் (15:1, 5-8; 16:1-21). பெருஞ்சத்தம் ஒன்று, "ஆயிற்று" என்று அறிவிக்கிறது (16:17).*

VI. *சபையின் விரோதிகளில் பலர் அழிக்கப்படுதல் (17-19). மகா பாபிலோன் என்ற நான்காவது விரோதியொன்று அறிமுகப்படுத்தப் படுகிறது (17:5).[7] விழிகளை மயக்கும் இந்த வேசி "பரிசுத்தவான்களின் இரத்தத்தினாலும் இயேசுவினுடைய சாட்சிகளின் இரத்தத்தினாலும் வெறிகொண்டிரு"ந்தாள் (17:6; 18:24ஐயும் காணவும்). போராட்டம்*

ஏற்பட்டிருந்தது, நன்மையானது தோல்வியடைந்திருந்ததாகக் காணப்பட்டது - ஆனால் சாத்தானுடைய உடன் வேலையாட்கள் மூன்றுபேர், தாங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததற்கு நேரெதிரான வரிசை முறையில், விரைவான தொடர்வரிசையில் வீழ்ந்தனர். முதலாவது மகா பாபிலோனின் அழிவு சித்தரிக்கப்படுகிறது (18:1-19:4). பின்பு இயேசு நியாயாதிபதியாகவும் முறையாக வாதிடுபவராகவும் வருகின்றபோது, இரண்டு மிருகங்களும் (மிருகமும் கள்ளத் தீர்க்கதரிசியும்) "கந்தகம் எரிகிற அக்கினிக்கடலிலே உயிரோடே தள்ளப்பட்டார்கள்" (19:20).

VII. வலுசர்ப்பம் அழிக்கப்படுதல், தொடர்ந்து புதிய வானமும் புதிய பூமியும் ஏற்படுதல் (20-22). ஆயிரம் ஆண்டுகள் அரசாட்சியைப் பற்றிக் கூறுதல் அல்ல ஆனால், சிவப்பான பெரிய வலுசர்ப்பம் தள்ளப்படுதலைச் சித்தரித்தல் என்பதே அதிகாரம் 20ன் நோக்கமாக உள்ளது. போராட்டத்தையும் தோல்வியாகத் தோன்றுகிற விஷயத்தையும் பற்றி நாம் வாசிக்கின்றோம்: யோவான், "இயேசுவைப்பற்றிய சாட்சியினிமித்தமும் தேவனுடைய வசனத்தினிமித்தமும் சிரச்சேதம்பண்ணப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களை'' காணுகின்றார் (வசனம் 4). இருப்பினும் இந்தக் காட்சியானது, வெற்றியையும் உள்ளடக்குகிறது: "மேலும் அவர்களை மோசம்போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்கலிலும் வாதிக்கப்படுவார்கள்'' (வசனம் 10). பின்பு வெளிப்படுத்தின விசேஷம் நியாயத்தீர்ப்பு பற்றிய ஒரு சித்தரிப்பு (20:11-15) மற்றும் பரலோகத்தைப்பற்றிய மகிமையுள்ள ஒரு தரிசனம் (21:1-22:15) ஆகியவற்றுடன் முடிவடைகிறது. *நன்மையின் சக்திகள் வெற்றியடைந்துள்ளன!*

## முடிவுரை

இது நமது பின்னணிப் படிப்பை நிறைவு செய்கிறது. வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தைப் பற்றி இப்போது நீங்கள் நினைப்பது என்ன? நீங்கள், "இது புரிந்து கொள்ளக் *கடினமானதாக* இருக்கலாம், ஆனால் இது புரிந்து கொள்ள *இயலாததாக* இருப்பதில்லை" என்று நினைக்கின்றீர்கள் என்று நான் நம்பிக்கையாய் இருக்கின்றேன். *"கடினமானது"* மற்றும் *"இயலாதது"* என்ற வார்த்தைகளுக்கு இடையில் ஒரு உலக அளவு வேறுபாடு உள்ளது - இது, ''நான் ஏன் இதை முயற்சி செய்ய வேண்டும்?'' மற்றும் ''நான் உண்மையிலேயே விரும்பினால் இதை நான் செய்ய முடியும்!'' என்பவற்றிற்கு இடையிலான வேறுபாடாக உள்ளது.

வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தைப் புரிந்து கொள்ளவும் இதன் சத்தியங்களினால் ஆசீர்வதிக்கப்படவும் நீங்கள் *விரும்புகின்றீர்கள்* என்று நான் நம்பிக்கையாய் இருக்கின்றேன். வெளிப்படுத்தின விசேஷம் பற்றிய ஒரு சுருக்கமான தொகுப்புரையைக் கொடுக்கும்படி ஜானி இராம்ஸே அவர்களுக்கு அறைகூவல் விடுக்கப்பட்டது. அவர் இந்தப் புத்தகத்தை அதிகமாக வாசித்து, இதைப் படித்திருக்கிறார். அவர் இதைப் போதித்து

இதைப் பற்றி எழுதியிருக்கின்றார்; ஆனால் வெளிப்படுத்தின விசேஷத்தை அப்போதுதான் முதல் முறையாகப் பார்ப்பது போல் அவர் அணுகினார். பின்பு அவர், "மனிதர்களின் விஷயங்களில் தேவன் இன்னமும் ஆளுகை செய்கின்றார் மற்றும் எனது அடைவிடம் அவரது கரங்களில் உள்ளது என்பதே இந்தப் படிப்பில் இருந்து நான் கற்றுக்கொண்டுள்ள புதிய பாடமாக உள்ளது" என்று அறிக்கையிட்டார்.[8]

வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்திலிருந்து மாபெரும் பாடங்கள் பல நமக்காகக் காத்திருக்கின்றன. வசனப்பகுதியைப் பற்றிய நமது படிப்பை நான் ஆவலுடன் எதிர்நோக்கியிருக்கின்றேன். நீங்களும் அவ்வாறே இருப்பீர்கள் என்று நான் நம்பிக்கையாய் இருக்கின்றேன்!

---

குறிப்புகள்

[1]"நன்மையின் தோற்றப்படியான தோல்வி" என்ற கருத்தானது "தீமையின் தோற்றப்படியான வெற்றி" என்றும் விளக்கப்படுத்தப்பட முடியும். [2]R. C. H. Lenski, *The Interpretation of St. John's Revelation* (Minneapolis, Minn.: Augsburg Publishing House, 1963), 24. [3]Frank Pack, *Revelation*, Part 1, The Living Word Series (Austin, Tex.: R. B. Sweet Co., 1965), 17. [4]William Hendriksen, *More Than Conquerors* (Grand Rapids, Mich.: Baker Book House, 1954), 25. [5]முதல் பகுதியானது நன்மைக்கும் தீமைக்கும் (சபைக்கும் உலகத்திற் கும் நேரெதிரான) இடையிலான மேலோட்டமான போராட்டத்தின்மீது கவனம் செலுத்துவதாயிருக்கையில், இரண்டாம் பகுதியானது மேல்பகுதிக்குக் கீழான நிலையில் (கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் நேரெதிரான) நடைபெறும் யுத்தத்தின்மீது அதிக அக்கறையாய் இருக்கிறது என்று சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். [6]கடலில் இருந்து எழுந்து வந்த மிருகமானது பிற்பாடு, "மிருகம்" என்று மாத்திரம் அழைக்கப்படுகிறது (14:9), அதே வேளையில், நிலத்தில் இருந்து எழுந்து வந்த மிருகமானது கள்ளத் தீர்க்கதரிசி என்று அடையாளப்படுத்தப் படுகிறது (16:13). இப்போதைக்கு இவற்றை, கிறிஸ்தவத்தை எதிர்க்கும் சக்திகள் என்று மாத்திரம் நினைத்துக் கொள்ளுங்கள். [7]இது ரோமாபுரி நகரமாக உள்ளது என்ற கருத்தைக் குறித்துக் கேள்விகள் கொஞ்சமாகவே உள்ளன (17:9, 15, 18). [8]Johnny Ramsey, "The Book of Revelation - A Summary," *Studies in the Revelation: The Third Annual Denton Lectures* (1984): 37.

---

## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் ஆய்வுக்கருத்து என்ன?
2. இந்தப் புத்தகத்தின் மும்மடங்குச் செய்தி என்ன?
3. இந்தப் பாடத்தின்படி, வெளிப்படுத்தின விசேஷத்தில் இந்த மும்மடங்குச் செய்தி எத்தனை முறைகள் தரப்பட்டுள்ளது?
4. நீங்கள் வாழும் நாட்டில் இந்தச் செய்தி இன்னமும் அவசியமாய் இருக்கிறது என்று நீங்கள் நினைக்கின்றீர்களா? ஏன்?
5. வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் பற்றி இந்தப் பாடத்தில்

*தரப்பட்டுள்ள வரைக்குறிப்பை அப்படியே எழுத முயற்சி செய்யவும்.*

6. *வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் பற்றி நீங்கள் இதுவரை கற்றுள்ளவற்றில் மிகவும் முக்கியமானது என்று கருதும் உண்மை எது?*
7. *உங்களுக்குத் தனிப்பட்ட வகையில் உதவக்கூடியதாக நீங்கள் கற்றுள்ளது என்ன?*
8. *இதைத் தொடர்ந்து வருகிற வசனங்களின் படிப்பில் எதைக் கற்றுக்கொள்ளப்போவதாக நீங்கள் நம்பியிருக்கின்றீர்கள்?*



*இரண்டு சாட்சிகள் (11:3)*



“அவர்களுடைய உடல்கள் ... வீதியிலே கிடக்கும” (11:8).



*“அவர்கள் ... மேகத்தில் ஏறி*
*வானத்திற்குப் போனார்கள்” (11:12).*